(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 15 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, ஓகத்து 06, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0042/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கக்கணக்கு மற்றும் நிதி நிறுவனத்தின் கடந்த ஐந்து வருடங்களுக்கான கணக்குகளையும்,

(ii) பயிற்றப்பட்ட நபர்களின் எண்ணிக்கையினையும் செயற்பாட்டுத்துறைகளையும்,

(iii) ஒவ்வொரு செயற்பாட்டிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையினையும்,

(iv) இக் குறிப்பிட்ட நிறுவனத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இந்த நிறுவனத்தின் ஆளுநர்கள் சபையினதும் பணிப்பாளர்களினதும் பெயர்களையும்,

(ii) பொது முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக் கணக்கியல் நிறுவனம் என்னும் நிறுவனமும் உண்டா என்பதையும்,

(iii) அதில் பயிற்றப்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும்,

(iv) அவற்றின் நோக்கம் மற்றும் வகிபங்கு என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட பொது முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி கணக்கியல் நிறுவனம் பட்டய அந்தஸ்தினைப் பெறத்தீர்மானித்து பின்பு 2003 ஆம் ஆண்டில் அது நிறுத்தப் பட்டது உண்மையா என்பதையும்,

(ii) இந்த நோக்கத்தினை மீளப் புதுப்பிக்க அவர்கள் மீண்டும் முயற்சிக்கின்றார்களா என்பதையும்,

(iii) அரசாங்கக்கணக்கு மற்றும் நிதி நிறுவனத்தினைப் பொறுப்பேற்று நடாத்த அது திட்டமிடுகிறதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0043/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு முதல் இன்றுவரையிலான காலப்பகுதியினுள் உண்ணாட்டரசிறையிலிருந்து பெறுமதி கடன் வழங்கியோருக்கு மீளச் செலுத்த வேண்டியுள்ள மொத்த நிலுவை, வருடாந்த அடிப்படையில் எவ்வளவு என்பதையும்,

(ii) 10 மில்லியன் ரூபாய்க்கு மேல் அரசினால் கடன் கொடுக்க வேண்டியுள்ள அமைப்புகளின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) மேற்குறிப்பிட்ட தொகைகள் சரிபார்க்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டனவா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மீளச் செலுத்தப்படாமைக்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) கடன் வழங்கியோருக்கு அரசாங்கம் வட்டி செலுத்துகிறதா என்பதையும்,

(iii) ஆம் எனில், வட்டி வீதத்தையும் அது செலுத்தப்பட்ட திகதியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பெறுமதி சேர்வரி மோசடியின் நிலைமை என்ன என்பதையும்,

(ii) விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன என்பதையும்,

(iii) விசாரணை முடிவுறும் திகதி என்ன என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0044/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள் விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெதுறுஓயா நீர்ப்பாசனக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட திகதிகளையும்,

(ii) அதன் மொத்தச் செலவையும்,

(iii) நிதியிடும் மூலத்தையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தொழிற்பாட்டுக்கு வரவுள்ள நீர்ப்பாசனக் கருத்திட்டத்தினால் அகற்றப்பட வேண்டியுள்ள குடும்பங்கள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும்,

(ii) இடம்பெயரச்செய்தல் எப்போது இடம்பெறும் என்பதையும்,

(iii) புத்தளம் மாவட்டத்திலுள்ள கறுவெலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு 80 குடும்பங்கள் இடம்பெயரச் செய்யப்பட்டுள்ளன என்பது உண்மையா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், இடம்பெயர்வுக்கான எல்லா அடிப்படை வசதிகளும் பணமும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(v) அவ்வாறு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில் நீர்த்தட்டுப்பாடு மற்றும் யானைகளின் கொடூரம் போன்ற தொல்லைகளுக்குத் தாம் ஆட்படுவதாக அம்மக்கள் கூறுகின்றார்களா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அபிவிருத்தியின் பின்னர்தான் அரசாங்கம் அவர்களை மீள்குடியேற்றுமா என்பதையும்,

(ii) இடம்பெயர்தலுக்கான செலவையும் அதற்கு நிதியிடும் மூலத்தையும்,

(iii) 2007 ஜூன் 11 ஆம் திகதி கௌரவ அமைச்சரும் ஏனைய சில அரசியல்வாதி களும் தெதுறுஓயாவுக்கு விஜயம் செய்தபோது கைது செய்யப்பட்ட 20 பேருக்கெதிராக ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை யும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0381/ ' 08

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அபிவிருத்தி லொத்தர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) அபிவிருத்தி லொத்தர் சபையில் தற்போது சேவையாற்றுகின்ற ஊழியரக்ளின் எண்ணிக்கை மற்றும் சம்பந்தப்பட்ட பதவிகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பதவி வகிப்பவர்களின் பெயர், முகவ, கல்வி மற்றும் தொழில் தகைமை ஆகிய விபரங்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்களின் மாதாந்த சம்பளம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0627 / '08

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை மாவட்டத்தின் இரத்தோட்டை பொலிஸ் அதிகார பிரிவைச் சேர்ந்த இரத்தோட்டை நகரத்தின் "அனோமா" இல்லத்தில் வசித்து வந்த திரு. சரத் காமினி லியனகே உட்பட அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் 2004 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் முதல் காணாமல் போயுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அரசியல் கட்சியொன்றின் தீவிர ஆதரவாளரான திரு. சரத் காமினி லியனகேவுக்கு 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்பு மரண அச்சுறுத்தலும் பலவிதமான தாக்கங்களும் ஏற்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) இது சம்பந்தமாக இரத்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) திரு. சரத் காமினி லியனகேயும் அவரது குடும்ப உறுப்பினர்களும் தற்போது உயிருடன் உள்ளார்களா என்பதையும்,

(ii) ஆமெனில், எவ்விடத்தில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0408/ '08

6.

கௌரவ அசல ஜாகொடகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0409/ '08

7.

கௌரவ அசல ஜாகொடகே,— இளைஞர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0531/ '08

8.

கௌரவ அநுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லங்காகேஸ் கம்பனி, செல் கேஸ் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது எப்போதென்பதையும்,

(ii) அதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பின், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ள கம்பனிகள் மற்றும் விலைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(ii) செல் கம்பனி தேர்ந்தெடுக்கப்பட்டது எந்த அடிப்படையில் என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி கேஸ் கம்பனியின் அரசுக்கும் ஏனைய கம்பனிகளுக்கும் சொந்தமாகவுள்ள பங்குகள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கேஸ் கம்பனி செல் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்ட வருடத்திலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள பங்கு இலாபம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0533/ '08

9.

கௌரவ அநுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டில் பாடசாலை பாடப் புத்தகங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(ii) மேற்படி வருடத்தின் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு வகுப்பிற்கும் அச்சிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) மேற்படி பாடப்புத்தகங்கள் எந்நிறுவனங்களில் அச்சிடப்பட்டன என்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் அச்சிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(v) மேற்படி நிறுவனங்கள் எவ்வடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன என்பதையும்,

(vi) இந்நிறுவனங்களுக்கு செலுத்தப்படவேண்டிய மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்,

(vii) இற்றைவரை செலுத்தப்பட்டுள்ள மற்றும் செலுத்தப்படவேண்டியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0534/ ' 08

10.

கௌரவ அநுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலைக் கல்வி நடவடிக்கையில் வகுப்புகளுக்குரிய பாடத்திட்டம் எத்தனை வருடங்களுக்கு ஒருமுறை மாற்றப்படுகின்றதென்பதையும்,

(ii) 2007 ஆம் ஆண்டில் எந்த வகுப்புக்குரிய பாடத்திட்டம் மாற்றப்பட்டதென் பதையும்,

(iii) மேற்படி பாடத்திட்டம் மாற்றப்படுவதற்கு பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்,

(iv) 2007 ஆம் ஆண்டில் பாடத்திட்டத்தை மாற்றுவதற்கு வகுப்புகள் தெரிவு செய்யப்பட்டபோது பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0630 / ' 08

11.

கௌரவ திலகரத்ன வித்தானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, உடுகம கல்வி வலையத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு பாடசாலையிலும் 1 ஆம் வகுப்பு முதல் உள்ள வகுப்புகளின் எண்ணிக்கை மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்,

(iv) வெற்றிடங்கள் இருக்கின்ற பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் எப்போது வழங்கப்படுவார்கள் என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கல்வி வலயத்தைச் சேர்ந்த தற்போது மூடப்பட்டுள்ள பாடசாலை களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) ஆசிரியர் பற்றாக்குறை அல்லது மாணவர்களின் வருகையின் குறைவு காரணமாக மூடப்படவுள்ள பாடசாலைகள் யாவையென்பதையும்,

(iii) அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) ஏதேனும் காரணத்தினால் மூடப்படவுள்ள பாடசாலைகளை விசேடமாகக் கவனத்திற்கொண்டு தேவையான பௌதீக வளங்களையும் ஆசிரியர்களையும் பெற்றுத் தந்து அப் பாடசாலைகள் மூடப்படுவதை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை அவர் எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0631 / '08

12.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2003 ஆம் ஆண்டு வெள்ளப் பெருக்கினால் சேதமடைந்த கிங் கங்கையின் பாலங்களுக்குப் பதிலாக 6 பாலங்களுக்கான வேலைகள் 2006.03.27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(ii) இப்பாலங்கள் 2007.08.27 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஒரு பாலத்தைத் தவிர ஏனைய 5 பாலங்களின் வேலைகளை 2007.12.31 ஆம் திகதி முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் 1896 ஆம் இலக்க பிரேரணைக்கு வழங்கப்பட்ட பதிலில் குறிப்பிடப் பட்டதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின் கெட்டகொட பாலத்தின் நிர்மாணவேலைகளை நிறுத்துவ தற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா,

(ஈ) (i) பாலத்தைத் தாங்கி நிற்கத் தேவையான இரண்டு பிரதான கேபள்களை வெளிநாட்டிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான கட்டளை எப்போது முன்வைக்கப்பட்டது என்பதையும்,

(ii) பாலத்துக்குரிய தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தென் மாகாண கிராமியப் பொருளாதார ஊக்குவிப்புக் கருத்திட்டத்துக்கு வழங்கப்பட்டுள் ளதுடன் எந்நிறுவனத்தினால் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்துக்கு (SD&CC ) நிதி செலுத்துவது தாமதமாகிறதென்பதை யும்,

(iii) பாலங்களுக்காக இதுவரை அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) விசேட விடயமொன்றெனக் கருதி கெட்டகொட மற்றும் எஹலகந்த பாலங்களை நிர்மாணிப்பது ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0647 / '08

13.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் கொபெய்கனே பொலிஸ் நிலையத்திற்கு 2006.01.01 ஆம் திகதி தொடக்கம் 2007.01.01 ஆம் திகதி வரை கிடைத் துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) இம் முறைப்பாடுகளும் விசாரிக்கப்பட்டு, தீர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் விசாரிக்கப்படாத முறைப்பாடு களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி விசாரிக்கப்படாத முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற திகதி, முறைப் பாட்டினைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தரின் பெயர், முறைப்பாட்டின் தன்மை, மற்றும் விசாரிக்கப்படாமைக்கான காரணம் ஆகியவற்றை ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் உரியதாக வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி முறைப்பாடுகள் விசாரிக்கப்படாமை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0648 / ’08

14.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் மாவட்டத்தில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டிருந்த விசேட மின்சாரத் திட்டங்கள் இருக்கின்றனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) அந்தக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் அவற்றின் விபரங்களையும்,

(ii) இந்தக் கருத்திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) அந்த ஒவ்வொரு திட்டத்தினதும் பணிகள் எப்போது பூர்த்தி அடையும் என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0670 / ’08

15.

கௌரவ சமன்சிறி ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நவகத்தேகம, வெலேவெவ, 40 ஆம் இலக்கத்தில் வதியும் எம். ஜே. எஸ். ரஞ்சித் என்பவர் 1989.06.15 ஆம் திகதி முதல் பொலிஸ் கான்ஸ்டபிளாக சேவையில் இணைந்து கொண்டாரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) வென்னப்புவ பொலிஸ் பயிற்சி கல்லூரியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென இவரின் நியமனம் இரத்து செய்யப்பட்டதற்கு காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) 1992.04.10 ஆம் திகதி திரு. ரஞ்சித் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டமைக் கான காரணம் ஏற்கனவே இவரின் நியமனம் இரத்து செய்யப்பட்டமை அநீதியானதென கருதப்பட்டமையினாலா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேதகு சனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய 16 வருடத்திற்கு மேல் பொலிஸ் சேவையில் கடமையாற்றியிருக்கும் பதவி உயர்வு பெறாதவர் களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான தீர்மானத்திற்கிணங்க 2006.02.23 ஆம் திகதி பொலிஸ் சார்ஜன்ட் பதவிக்கு, பதவிஉயர்வு பெற்ற இவர் 2007.07.30 ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வருமாறு பதவி இறக்கம் செய்யப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) இவருக்கு எதிராக ஒழுக்காற்று குற்றச்சாட்டு ஏதேனும் இருக்குமாயின் அது யாதென்பதையும்,

(iii) இவரது நியமனத் திகதி 1989.06.15 ஆம் திகதியென பொலிஸ் திணைக் களம் அங்கீகரித்திருந்தும் பதவி உயர்வு வழங்கப்படும் போது 1992.08.01 ஆம் திகதி முதல் சேவைக்காலம் கணிக்கப்பட்டமை எவ்வாறு நிகழ்ந்ததென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(உ) திரு. ரஞ்சித்திற்கு நியாயத்தை பெற்றுத்தருவதற்கு அவர் தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

கௌரவ (வண.) உடவத்தே நந்த தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"சமூக நிவாரண மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2008 ஓகத்து மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப் படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 142, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டு மில்லியன் (ரூபா 18,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| தலைப்பு 142 — | கலாசார அலுவல்கள்,<br>தேசிய மரபுரிமைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — சமூக கலாசாரம் இணைந்து செயற்படல் | |
| | மீண்டுவரும் செலவினம் | 18,000,000 |
| | மொத்தம் | 18,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 3 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,198,180,332.

*4.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 118, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து நூற்றி எண்பத்தி ஐந்து கோடியே நாற்பது இலட்சம் (ரூபா 1185,40,00,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | ரூபா |
|---|---|---|
| தலைப்பு 118 | — கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — கமத்தொழில் அபிவிருத்தி | |
| | மீண்டுவரும் செலவினம் | 1185,40,00,000 |
| | மொத்தம் | 1185,40,00,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 4 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,216,180,332.

*5.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்.— இரண்டாம் மதிப்பீடு

*7.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*8.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*9.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*12.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*19.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23அ ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*20.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 அ மற்றும் 23 ஆ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 பெப்ருவரி மாதம் 01 ஆந் திகதிய 1534 /18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*21.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான “2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்” அங்கீகரிக்கப்படுமாக.

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப் படுமாக.

*23.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*24.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில்

மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 | மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 | மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 | |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 | மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 | மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 | |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறி யியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்ட றிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*32.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

33.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.